# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 178/மா/2022**
**நாள் : 02.11.2022**

திரு. காஜா மைதீன்,
சென்னை–600 030. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–8,பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, ஷெனாய் நகர், வெங்கடசலாபதி தெரு, எண்.19 என்ற முகவரியில் வசிக்கும் திரு. காஜா மைதீன் என்பவரின் 18.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 178/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஷெனாய் நகர், வெங்கடசலாபதி தெரு, எண்.19 என்ற முகவரியில் வசிக்கும் திரு. காஜா மைதீன் என்பவரின் 18.10.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

"நான் வசித்து வரும் வீட்டின் முன்பு மரக்கிளைகள் விழுவது போல் தோற்றம் அளிக்கிறது. போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடையூறாக உள்ளது. தயவு செய்து இதை கருத்தில் கொண்டு மரக்கிளைகளை வெட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 26.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 20.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 26.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மேற்கண்ட முகவரியில் வசித்து வரும் நான், எனது குடியிருப்புக்கு முன்புறம் உள்ள மரத்தின் கிளைகள் பெரிதும் வளர்ந்துள்ளதால், அம்மரத்தின் அடி வேர் சற்று சாய்ந்துள்ளது. அதனால், அம்மரம் எந்த நேரத்திலும் சாயும் தருவாயில் உள்ளதால், மேற்கண்ட மரத்தின் கிளைகளை அகற்றிட மாநகராட்சி அலுவலர்களுக்கு புகார்கள் அனுப்பப்பட்டும், மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. போக்குவரத்து அதிகம் உள்ள மற்றும் பொதுமக்கள், பள்ளிக் குழந்தைகள் நடமாட்டமும் அதிகமுள்ள மேற்கண்ட இடத்தில்

வளர்ந்துள்ள அம்மரத்தினால் அபாயம் ஏற்படட வாய்ப்புள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள அம்மரத்தின் கிளைகளை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் பார்க் ஓவர்ஸீயர் 26.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்,**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை, செனாய் நகர் வெங்கடசலபதி தெருவில் வளர்ந்துள்ள மரத்தை நேரில் சென்று பார்த்த போது, அம்மரத்தின் கிளைகள் பெரிதும் ஓங்கி வளர்ந்துள்ளன. மனுதாரர் கேட்டுக்கொண்டவாறு, அம்மரத்தின் கிளைகளை வெட்டிட ஹைட்ராலிக் இயந்திரம் தேவைப்படுவதால், மேற்கண்ட இயந்திரத்தை மற்றொரு மண்டலத்திலிருந்து வரவழைத்து, மேற்கண்ட மரத்தின் கிளைகளை இன்னும் மூன்று நாட்களில் மாநகராட்சியால் அகற்றப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்"எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம் -8ன் பார்க் ஓவர்ஸீயராகப் பணியாற்றும் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர் தனது வீட்டின் முன் உள்ள மரம் விழுந்துவிடும் நிலையில் உள்ளதால், அம்மரத்தின் கிளைகளை அகற்ற வேண்டி மனு அளித்துள்ளார். பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -8ல் உள்ள பார்க் ஓவர்ஸீயர் மரக் கிளைகள் அதிக உயரத்தில் உள்ளதால், அதனை அகற்ற ஹைட்ராலிக் இயந்திரத்தின் மூலம் அகற்றப்படும் என தெரிவித்துள்ளார்.'

மனுதாரர் மேற்கண்ட பெரிய மரத்தின் கிளைகள் அகற்றிட வேண்டி புகார் மனு கொடுத்தும், மண்டலம் 8ன் அலுவலர்களால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. இச்செயல், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்களுக்கு பொது மக்களின் பாதுகாப்பு பற்றிய கடமை உணர்வு இல்லை என்பதை காட்டுகிறது. இது மிகவும் கண்டிக்கத் தக்கது. மண்டலம் 8ல் உள்ள கள ஆய்வாளர்கள், மண்டலத்தில் எங்கு எல்லாம் ஆபத்தான மரங்கள் உள்ளனவோ அவற்றை அகற்ற வேண்டியது அவர்களின் கடமை ஆகும். இது அவர்கள் தங்கள் கடமையை சரிவர செய்யவில்லை என இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

மனுதாரரின் மனு, புகைப்படங்கள் மற்றும் வாக்குமூலத்தின் மூலம் மனுதாரரின் வீட்டின் முன்புறம் உள்ள மரம் அதிகபடியாக ஓங்கி வளர்ந்து மிக அதிகமான கிளைகளுடன் இருப்பதை அறிய முடிகிறது. மேலும், மரக்கிளைகள் தாழ்வாக, எப்போது வேண்டுமானாலும், குறிப்பாக இப்போது தொடங்கவுள்ள வடக்கிழக்கு பருவ மழையினால் முறிந்து பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளது என்பதை அறிய முடிகிறது. மரக்கிளைகள் மிக உயரமாக உள்ளதால், அதனை வெட்டிட ஹைட்ராலிக் இயந்திரம் தேவைப்படுவதால், அந்த இயந்திரத்தை மற்றொரு மண்டலத்திலிருந்து வரவழைத்து அதிகபடியான கிளைகளை மூன்று நாட்களில் அகற்றப்படும் என்பதை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 8ல் பணிபுரியும் பார்க் ஓவர்ஸீயராக பணியாற்றும் அலுவலரின் வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

**"The Chennai City Municipal Corporation Act, 1919", (Tamil Nadu Act IV of 1919)**
**Chapter XI – Nuisances**

**<u>259 "Precautions in case of dangerous trees,-</u>** (1) If any tree or any branch of a tree or the fruit of any tree be deemed by the commissioner to be likely to fall and thereby to

[endanger any person or any structure], the commissioner may, by notice, require the owner of the said tree to secure, lop or cut down the said tree so as to prevent any danger therefrom;

(2) If immediate action is necessary, the commissioner may himself, before giving such notice or before the period of notice expires or take such temporary measures, as he thinks fit to prevent danger, and the cost of so doing shall be recoverable from the owner of the tree in the manner provided in section 387."

எனவே, மேற்கண்ட விதிகளின்படி தற்போது வடகிழக்கு பருவ மழை தொடங்க உள்ள நிலையில், இவ்வாறான ஆபத்து விளைவிக்கும் மரங்களை கண்டறிந்து அம்மரங்கள் பாரம் தாளமல் விழாமல் இருக்கும் பொருட்டு அதன் மரக்கிளைகள் அகற்ற உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மண்டலம்-8ன் உதவி ஆணையரை இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள எல்லா மண்டல அலுவலருக்கும் இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுற்றறிக்கை அனுப்புமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. காஜா மைதீன்,
   எண்.19, வெங்கடாசலபதி தெரு,
   ஷெனாய் நகர், சென்னை – 600 030.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
   மண்டலம்–8,பெருநகர சென்னை மாநகராட்சி,
   புதிய எண்.36B, புல்லா அவென்யூ,
   ஷெனாய் நகர், சென்னை – 600 030.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032